தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 237 | 4 Pages | 25.3.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 237 | 4 பக்கங்கள் | 25.3.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்

**விளக்கம்:**
உடம்பை யான் எனக் கருதலும் தொடர்பு இல்லாத பொருளை எனது எனக்கருதலுமாகிய மயக்கத்தை போக்குகின்றவன், தேவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலை அடைவான்.

## நாக்பூர் வன்முறையில் வங்கதேசத்துக்கு தொடர்புசிவசேனா பகீர் குற்றச்சாட்டு



மும்பை, மார்ச்.25

சத்ரபதி சம்பாஜி நகரில் முகலாய மன்னர் அவுரங்கசீப்பின் கல்லறை உள்ளது. இதைஇடிக்கவேண்டும் என மாநிலத்தில் வலதுசாரி அமைப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். கடந்த 17ந் தேதி அவுரங்கசீப் கல்லறையை இடிக்க வலியுறுத்தி நாக்பூரில் வலதுசாரி அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது இஸ்லாமியர்களின் புனித நூல் வாசகங்கள் எரிக்கப்பட்டதாக வதந்தி பரவியது. இதையடுத்து ஏற்பட்ட வன்முறையில் வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டது. கடை, வீடுகள் சூறையாடப்பட்டது. 33 போலீசார் உள்ளிட்ட பலர் காயமடைந்தனர். வன்முறை குறித்து வழக்குப்பதிவு செய்து உள்ள போலீசார் 100க்கும் மேற்பட்டவர்களை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்தநிலையில் நாக்பூர் வன்முறையில் வங்கதேசத்துக்கு தொடர்பு இருப்பதாக சிவசேனாவை சேர்ந்த சஞ்சய் நிருபம் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது: நாக்பூர் வன்முறையில் ஈடுபட்டவர்களை வங்கதேசத்தில் கண்டுபிடிக்க முடியும். வன்முறை தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒருவர் நாசவேலைகளுக்கு சமூகவலைதளத்தை பயன்படுத்த நிதி திரட்டி உள்ளார்.உத்தவ் பாலாசாகேப் தாக்கரே கட்சியின் நிலைப்பாடுகள், அந்த கட்சி இந்துவிரோத கட்சியாக மாறிவிட்டதை காட்டுகிறது. மாதோஸ்ரீயில் (உத்தவ் தாக்கரே வீடு) விரைவில் பால்தாக்கரே படத்துக்கு அருகில் அவுரங்கசீப்படம்போடப்படும். இவ்வாறு அவர்கூறினார். விசாரணை நடந்து வரும் நிலையில் நாக்பூர் வன்முறையில் வங்கதேசம் தொடர்பு இருப்பது பற்றி தற்போது எதுவும் கூற முடியாது என நேற்று முன்தினம் முதல்மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது

## தேசிய கீதத்தை அவமதித்தாரா? நிதிஷ்குமார் மீது தவறு இல்லை; ஜிதன் ராம் மஞ்சி கருத்து



பாட்னா, மார்ச்.25

பீகார் மாநில முதல் மந்திரி நிதிஷ்குமார் சமீபத்தில் பாட்னாவில் ஒரு நிகழ்ச்சியில் தேசிய கீதம் இசைத்தபோது, கையசைத்துக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தார். அவர் தேசிய கீதத்தை அவமதித்து விட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

இந்நிலையில், பீகார் மாநிலம் கயாவில், மத்திய மந்திரியும், இந்துஸ்தான் அவாம் மோர்ச்சா கட்சி தலைவருமான ஜிதன் ராம் மஞ்சியிடம் நிருபர்கள் கருத்து கேட்டனர். அவர் கூறியதாவது: நிதிஷ்குமார் மீது எந்த தவறும் இல்லை. ஆட்சேபிக்க எதுவும் இல்லை. சமீபத்தில் அரசியலுக்கு வந்தவர்கள், தேசிய கீதத்தை எப்படி மதிக்க வேண்டும் என்று நிதிஷ்குமாருக்கு பாடம் நடத்தத் தேவையில்லை. நிதிஷ்குமார் 20 ஆண்டுகளாக முதல்மந்திரியாக இருக்கிறார். அவர் நல்லாட்சி நடத்தி உள்ளார். உலகம் முழுக்க பாராட்டு பெற்றுள்ளார். அவரது தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி, பீகார் சட்டசபை தேர்தலில் வெற்றி பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

## வெளிநாட்டு உதவி நிறுத்தம் எதிரொலி: அமெரிக்காவிடம் நிதியை திரும்ப கேட்கும் ஐரோப்பிய நாடுகள்




வாஷிங்டன், மார்ச்.25

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்றவுடனே, அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகளை நிறுத்தி வைத்தார். இந்த பணிகளை செய்யும் அமெரிக்க நிறுவனத்துக்கு தடை விதித்தார். ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு உதவிகளை செய்து வந்த அமெரிக்க நிறுவனத்தில் அமெரிக்காவின் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் நன்கொடைகளை வழங்கி இருந்தன. ஆனால் இந்த உதவிகளை டிரம்ப் நிறுத்தியதால், தங்கள் பணத்தை திரும்ப வழங்குமாறு ஐரோப்பிய நாடுகள் கேட்டு வருகின்றன. அந்தவகையில் நார்வே, சுவீடன் மற்றும் நெதர்லாந்து நாடுகள் கூட்டாக வழங்கி இருந்த 15 மில்லியன் டாலரை (சுமார் ரூ.128 கோடி) திரும்ப வழங்குமாறு அறிவுறுத்தி உள்ளன.

தாங்கள் வழங்கிய இந்த பணம் தேவைப்படும் நாடுகளுக்கு செலவிடப்படுமா? அல்லது திரும்ப தரப்படுமா? என டிரம்ப் நிர்வாகத்தை கேட்டுள்ளன. எனினும் இது குறித்து அமெரிக்காவிடம் இருந்து பதில் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த விவகாரத்தில் சுவீடன் அரசின் செய்தி தொடர்பாளர் ஜூலியா லின்ட்ஹோம் கூறுகையில், 'இது எங்களுக்கு ஒரு கவலையாக இருக்கிறது. வெளிநாட்டு உதவி நடவடிக்கைகளுக்கு பணம் வழங்கிய எங்கள் கூட்டாளிகள் அதற்கான பயனை பெற வேண்டும்' என தெரிவித்தார்

# தமிழக எம்.பி.க்களுடன் பிரதமரை சந்திக்க முடிவு: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச்.25

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சட்டசபையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தொகுதி மறுவரையறை தொடர்பான கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டம் தொடர்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.மக்கள்நல்வாழ்வுதிட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காகத் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்காகச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாடு சட்டசபையில் தான் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வட மாநிலங்களில் எந்த விகிதத்தில் தொகுதிகள் மறுவரையறைக்கப்படுகிறதோ அதே விகிதத்தில் தமிழ்நாட்டிலும் செயல்படுத்த வேண்டும். தமிழ்நாடு முன்னெடுத்துச் செல்கின்ற தொகுதி மறுவரையறை விழிப்புணர்வு குறித்து தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மக்கள்தொகை கட்டுப்பாட்டை வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டிய மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது.



தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் ஆதரவு தெரிவித்த அதிமுக உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் இதயப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நியாயமான தொகுதி மறுவரையறையை பெற்றிட தமிழக எம்.பி.க்களுடன் பிரதமரை சந்தித்து வலியுறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும். தற்போது இருக்கும் தொகுதி மறுவரையறை மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் எனப் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு போராடும்.. தமிழ்நாடு வெல்லும்... இவ்வாறு அவர் பேசினார்.

## பள்ளி மாணவர்களுக்கு பேருந்து பயணத்தை மேற்கொள்ளுதல் பற்றி விழிப்புணர்வு

மதுரை காவல் ஆணையர் முனைவர் ஜெ லோகநாதன் ஐபிஎஸ் அவர்களின் உத்தரவின்படி காவல் துணை ஆணையர் போக்குவரத்து வனிதா அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை மாநகரில் பல்வேறு பகுதிகளிலும் பேருந்து நிறுத்தங்களிலும் பேருந்து பயணங்களில் செல்லும் மாணவர்கள் படிக்கட்டுகளில் நின்று கொண்ட தொங்கி கொண்டோர் செல்லாத வகையிலும்,, முறையான பேருந்து பயணத்தை மேற்கொள்ளுதல் பற்றியும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.. அதன் ஒரு பகுதியாக திலகர் திடல் காவல் நிலையத்துக்கு உட்பட்ட மணி நகரம் பகுதியில் அமைந்துள்ள மதுரை லேபர் வெல்பர் அசோசியேசன்( MLWA ) மேல்நிலைப் பள்ளியில்.. பள்ளி மாணவர்கள் பேருந்தில் பயணிக்கும் பொழுது படிக்கட்டில் தொங்கி கொண்ட நின்று கொண்டு செல்லக்கூடாது என்றும் அதனால் ஏற்படக்கூடிய பொருளாதார ரீதியான உடல் ரீதியான மன ரீதியான விபரீதங்கள் ஆபத்துகள் குறித்தும், எடுத்துரைத்து விழிப்புணர்வு வழங்கினார்..




மேலும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு எதிர் வரக்கூடிய அரசு பொதுத் தேர்வினை எவ்வாறு எதிர்கொண்டு வெற்றி பெறுதல் குறித்தும் அறிவுரையினை திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி வழங்கினார். உடன் பள்ளி தலைமை ஆசிரியர்.. சார்பாய்வாளர் லிங்க்ஸ்டன் பங்கேற்றனர்..

## நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே எருமாடு பகுதியில், பழமை வாய்ந்த சிவன் கோவிலை இந்து சமய அறநிலைத்துறை கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆர்ப்பாட்டம்

ஊட்டி மார்ச்.25

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே எருமாடு பகுதியில், பழமை வாய்ந்த சிவன் கோவிலை இந்து சமய அறநிலைத்துறைகட்டுப்பாட்டில்கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆர்ப்பாட்டம் நடந்தது. எருமாடு பஜாரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், எருமாடு சிவன் கோவில் மீட்பு குழு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் வரவேற்றார். கோவில்தர்மகர்த்தாசுந்தரம்தலைமை வகித்து, ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். 1600 ஆண்டுகள் பழமை வாய்ந்த எருமாடு சிவன் கோவில், திப்பு சுல்தான் படை எடுப்பின் போது சிதிலம் அடைந்தது. தொடர்ந்து விவசாயிகள் இணைந்து கோவிலை புனரமைத்தனர். கோவிலுக்கு 48 சென்ட் நிலம் மட்டுமே உள்ள நிலையில், இதனை ஒட்டி அமைந்துள்ள கிராம சாவடி நிலத்தில் ஆண்டு வரும் சிவராத்திரி நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 1982 ஆம் ஆண்டு கோவிலை ஒட்டி இஸ்லாமியர் ஒருவர் உடல் அடக்கம் செய்யப்பட்டதால், பதட்டமான சூழல் உருவாகி பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டதுடன், கோவிலை ஒட்டி ஒரு தரப்பினர் மதில் சுவரை ஏற்படுத்தினார்கள். இதனை அகற்றி, நிலத்தை கோவில் பூப்படைக்க 1984இல் நீதிமன்றம் உத்தரவிட்டும் அது நடைமுறைப்படுத்தவில்லை. கோவில் நிலம் அபகரிக்கப்பட்டதால் ஏற்பட்டதால், கடந்த 1982 ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரை கோவில் பூஜைகள் நடத்தாமல் முடக்கப்பட்டு இருந்தது. 2000 மாவது ஆண்டில் பக்தர்கள் இணைந்து மகிழ்ச்சி வரை அகற்றினார்கள். தொடர்ந்து பல்வேறு பிரச்சனை ஏற்பட்ட நிலையில் அப்போதைய மாவட்ட கலெக்டர் சுப்ரியா சாதி மேல் ஆய்வு செய்து பேச்சுவார்த்தை நடத்தியதில், இஸ்லாமிய மயானத்திற்கு ஏற்கனவே உள்ள இரண்டு ஏக்கர் நிலத்துடன், மேலும் ஒரு ஏக்கர் என மூன்று ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. கோவிலை ஒட்டிய நிலம் தொடர்பாக மா.கம்யூ., கட்சி சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு கொடுக்கப்பட்டுள்ளதால், இந்த நிலத்தில் ஆண்டு தோறும் சிவராத்திரி விழா மற்றும் வருவாய்த்துறை அனுமதியுடன் நடத்தவும், வேறு எந்த நிகழ்ச்சிகளும் நடத்தக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் எருமாடு பகுதியில் தமிழ் சங்கம் என்ற பெயரில், செயல்படும் குழுவினர் சர்ச்சைக்குரிய நிலப் பகுதியில் சமத்துவ பொங்கல் வைக்க அனுமதி கோரி, அதற்கு வருவாய் துறை அனுமதி மறுக்கப்பட்டதால் ஆளுங்கட்சியினர் பல்வேறு புகார்களை கூறி, இந்த கோவிலை இந்து சமய அறநிலைத்துறை கட்டுப்பாட்டில் கொண்டு வர முடிவு செய்துள்ளனர். எனவே இந்த செயலை அரசு கைவிடவும், இஸ்லாமியர்கள் பயன்பாட்டிற்காக மூன்று ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது போல், கோவிலுக்கும் போதுமான நிலம் வழங்க வேண்டும். சாதி, மதங்கள் பெயரால் பிரிவினை ஏற்படுத்தும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து கோவிலை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சி மேற்கொண்டால் தொடர் போராட்டம் நடத்தப்படும் என்றார். கூட்டத்தில் தேயிலை வாரிய துணை தலைவர் ராஜேஷ் சந்தர், படுகர் சமுதாய நிர்வாகி சபிதா போஜன், காட்டுநாயக்கர்சமுதாயத் தலைவர் சந்திரன், குறும்பா முன்னேற்ற சங்க தலைவர் அச்சுதன், நாயர் சர்வீஸ் சொசைட்டி நிர்வாகி ஜெயசீலன், வயநாடன் செட்டி சமுதாய நிர்வாகி ஸ்ரீதரன், எஸ்.என்.டி.பி. நிர்வாகி சுரேஷ், கன்னட சமுதாய தலைவர் மாதவன், மவுண்டாடன் செட்டி சமுதாய தலைவர் கணநாதன் உள்ளிட்ட பலர் பேசினார்கள். ஆர்ப்பாட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் கோவில் கமிட்டி நிர்வாகிகள், இந்து சமுதாய நிர்வாகிகள் மற்றும் அனைத்து சமுதாய சங்க தலைவர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர். மீட்புக் குழு பந்தலூர் தாலுக்கா நிர்வாகி பிரபாகரன் நன்றி கூறினார்.




## மதுரை: காவலர் கொலை வழக்கில் ஒருவரை சுட்டுப்பிடித்தது போலீஸ்

மதுரை,மார்ச்.25

மதுரையில் கடந்த 19 ஆம் தேதி தனிப்படை காவலர் மலையரசன் என்பவர் மர்மமான முறையில் உயிரிழந்தார். இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். இதில் அவர் எரித்து கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து இந்த வழக்கில் தொடர்புடையவர்களை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர்.

இந்த நிலையில் காவலர் மலையரசன் எரித்து கொல்லப்பட்ட வழக்கில் ஆட்டோ டிரைவரான மூவேந்திரன் என்பவர் மீது சந்தேகம் ஏற்பட்டது. அதன் பேரில் மூவேந்திரனை பிடித்து விசாரித்தனர். அப்போது அவர் போலீசாரின் பிடியில் இருந்து தப்ப முயன்றதாக கூறப்படுகிறது. இதையடுத்து அவர் மீது போலீசார் துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் காயமடைந்து அங்கேயே சுருண்டு விழுந்த, மூவேந்திரனை போலீசார் மீட்டு மதுரை ராஜாஜி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இன்று காவலர் கொலை வழக்கில் போலீசார் ஒருவரை சுட்டுப்பிடித்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.




மறைந்த பின்னணி பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் TMS அவர்களின் மகள் மல்லிகா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தார். இந்நிகழ்ச்சியில் விழா தலைமையை K.K.G.ஞானப்பிரபாகரன் ஏற்றார். TMS நற்பணி மன்றத்தின் தலைவர் M.P.பாலன் வரவேற்புரை நிகழ்த்தினார். முகேஷ் சர்மா, பாண்டியராஜன், டேவிட் தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் உள்ள கோயிலுக்கு ரூ.30 லட்சம் ஐம்பொன் சிலைகள் சுவாமிமலையில் தயாரிப்பு



கும்பகோணம், மார்ச்.25

தஞ்சை மாவட்டம் சுவாமிமலை அடுத்த திம்மக்குடியில் காஸ்ட் ஆப்பிரான்ஸ்கிரியேட்டிவ் சிற்பக்கூடம் உள்ளது. இந்த சிற்ப கூடத்தின் ஸ்தபதி வரதராஜ், பல ஆண்டுகளாக ஐம்பொன் சிலைகள் வடிவமைத்து வருகிறார். சமீபத்தில் ஐம்பொன்னாலான உலகிலேயே மிகப்பெரிய நடராஜர் சிலையை வடிவமைத்தார். இந்நிலையில் இலங்கை மட்டக்களப்பில் உள்ள காமாட்சி அம்மன் கோயிலுக்கு ஐம்பொன் சுவாமி சிலைகள் மற்றும் திருவாச்சி உள்ளிட்ட பூஜைப் பொருட்களை வடிவமைத்து தர வேண்டுமென ஸ்தபதி வரதராஜிடம் கோயில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அதன்படி ஏற்கனவே 1 டன் எடையில் 100 கோபுர கலசங்கள், 4 கோயில் மணிகள் வடிவமைக்கப்பட்டு கோயிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதைதொடர்ந்து அந்த கோயிலுக்கு ரூ.30 லட்சம் மதிப்பிலான சிவலிங்கம், நடராஜர், சிவகாமி, வராகி, ராஜமாதங்கி தேவி, சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை, அஷ்டலட்சுமி, மாங்காடு காமாட்சி, மீனாட்சி, மாணிக்கவாசகர், கருடன், ஆஞ்சநேயர் உள்பட 28 ஐம்பொன் சிலைகள் வடிவமைக்கப்பட்டது. இந்த சிலைகள் 2400 கிலோ எடையில் 2 அடி முதல் 5 அடி வரை அமைக்கப்பட்டது. இலங்கைக்கு ஓரிரு நாளில் கப்பலில் சுவாமி சிலைகள் அனுப்பி வைக்கப்படும் என்று ஸ்தபதி வரதராஜ் தெரிவித்தார்.

# அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்து ஒற்றை சாளர விண்ணப்ப பதிவுக்கு ஒரே அனுமதி: ஆ.ஹென்றி வலியுறுத்தல்



சென்னை, மார்ச்.25

பெய்ரா அமைப்பினர் தலைவர் ஆ.ஹென்றி அறிக்கை: தமிழ்நாட்டில் தற்போது மனைப் பிரிவு, மனை உட்பிரிவு, கட்டிட அனுமதி, நில மறுவகைபாடு மாற்றம் உள்பட பல்வேறு பிரிவுகளுக்கான அனுமதி பெறுவதற்கு ஆர்க்கிடெக்ட், பதிவு பெற்ற கட்டிட பொறியாளர்கள், உரிமம் பெற்ற கட்டிட அளவையர் ஆகியோரை பொதுமக்கள் அணுகுகின்றனர். சம்பந்தப்பட்ட துறையை சேர்ந்தவர்கள், அரசின் சட்ட விதிகளின்படி திட்ட அனுமதி வரைபடங்களை தயாரித்து, சம்பந்தப்பட்ட மாநகராட்சி, சிஎம்டிஏவின் அதிகார பூர்வ இணையதளம் வாயிலாக, ஒற்றை சாளர முறையில் சிஎம்டிஏ மற்றும் மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றி, தனித்தனியே அனுமதி பெற்று தருகின்றனர்.

எனினும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி, மாநிலம் முழுவதிலும் ஒற்றை சாளர முறையில் ஒரே இணையதள முகவரி மூலம் உடனடி அனுமதி பெறும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை செயல்படுத்தி வருகிறது. இதற்காக அந்தந்த துறைகளில் தனித்தனியே அனுமதி பெறுவதில் நீண்ட காலதாமதமாகி வருகிறது.

இவற்றை தவிர்க்க, தற்போது சிஎம்டிஏ மற்றும் மாநகராட்சி உள்பட அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து, ஒற்றை சாளர முறையில் நிலம், மனை, கட்டிடம் தொடர்பான பல்வேறு பிரிவுகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரே முறையில் உடனடி அனுமதி வழங்கும் வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் அமைச்சர்கள் வழிவகை செய்ய வேண்டும்.

# கடன் பிரச்னையால் தற்கொலைக்கு முயன்ற இளைஞரை துரிதமாக காப்பாற்றிய காவலர்களுக்கு காவல் ஆணையர் பாராட்டு



மதுரை, மார்ச்.25

கடன் பிரச்னையால் தற்கொலை செய்துகொள்ள முயன்ற இளைஞரை, துரிதமாக செயல்பட்டுக் காப்பாற்றிய காவலர்கள், அவருக்கு அறிவுரை வழங்கி அனுப்பி வைத்தனர். இளைஞரை காப்பாற்றிய காவலர்கள் ரமேஷ், அய்யனார், லட்சுமணன் ஆகியோருக்கு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி மாநகரக் காவல் ஆணையர் பாராட்டினார்

# கியூட் நுழைவுத்தேர்வு கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, மார்ச்.25

அடுத்த கல்வியாண்டில் இளநிலை படிப்புகளுக்கான க்யூட் நுழைவுத் தேர்வு வரும் மே 8 முதல் ஜூன் 1ம் தேதி வரை நடக்கிறது.

இதற்கான இணையதள விண்ணப்பப்பதிவு கடந்த மார்ச் 1ல் தொடங்கி 22ம் தேதி முடிவடைந்தது. இந்நிலையில் பல்வேறு தரப்பின் கோரிக்கைகளை ஏற்று விண்ணப்பிக்கும் கால அவகாசம் 2 நாட்கள் மட்டும் நீட்டிக்கப்பட்டுள்ளன. விருப்பமுள்ளவர்கள் https://cuet.nta.nic.in/ என்ற இணையதளம் வழியாக இன்றைக்குள்(மார்ச் 24) துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் செலுத்த மார்ச் 25ம் தேதி கடைசி நாளாகும். விண்ணப்பங்களில் மார்ச் 26, 27, 28ம் தேதிகளில் திருத்தம் மேற்கொள்ளலாம். ஏதேனும் சிரமம் இருப்பின் 011 40759000 என்ற எண் அல்லது cuetug@nta.ac.in என்ற மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளலாம். மேலும், ஹால்டிக்கெட் வெளியீடு உட்பட கூடுதல் விவரங்களை / www.nta.ac.in/ என்ற வலைத்தளத்தில் அறியலாம் என்று என்டிஏ செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரிசி ஆலையில் உமிக்குள் சிக்கி தொழிலாளி பலி



சென்னை, மார்ச்.25

செங்குன்றம் அடுத்த தீர்த்தங்கரையம்பட்டு ஊராட்சி, பாலவாயல் பகுதியில் தனியார் அரிசி ஆலை உள்ளது. இங்கு நேற்று நெல் அரவைக்கு பிறகு உமியை லாரி மூலம் அள்ளிக்கொண்டிருந்தனர். அப்போது உமி மற்றும் தகர சீட்டுகள் எதிர்பாராத வகையில் சரிந்து அங்கு பணிபுரிந்த 2 தொழிலாளர்கள் மீது விழுந்தது. இருவரையும் உமி மூடிக் கொண்டது.

இதை பார்த்த சக தொழிலாளர்கள் செங்குன்றம் தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

அவர்கள் விரைந்து வந்து உமியை அப்புறப்படுத்தி ஒருவரை உயிருடன் மீட்டனர். உமி குவியலின் அடியில் சிக்கிய நபர் மீட்கப்பட்டதும் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் வந்து பரிசோதனை செய்தனர்.

இதில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஜித்தாந்தர் ஜோகான் என்பவர் உயிரிழந்ததாக தெரிவித்தனர். உயிருடன் மீட்ட நபரை அருகே உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்து வருகின்றனர்.

# சிறந்த நீர்வள ஆதார திட்டம் உள்ளிட்ட பிரிவுகளில் தமிழ்நாடு நீர்வளத்துறைக்கு விருதுகள்

சென்னை, மார்ச்.52

ஒன்றிய நீர்ப்பாசன மற்றும் மின்சக்தி வாரிய தினம் ஆண்டுதோறும் டெல்லியில் கொண்டாடப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஒன்றிய நீர்ப்பாசன மற்றும் மின்சக்தி வாரியம் பல்வேறு பிரிவுகளில் நீர்வளத்துறையில் 2024ம் ஆண்டு விருதுகளுக்கான விண்ணப்பங்களை கோரியது. தமிழ்நாடு நீர்வளத்துறை விருதுகளுக்காக விண்ணப்பித்தது. ஒன்றிய நீர்ப்பாசன மற்றும் மின்சக்தி வாரியம் 2024ம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டிற்கான விருதுகளை வழங்க தமிழ்நாடு நீர்வளத்துறையை தேர்வு செய்துள்ளது.

அதன்படி பங்கேற்பு பாசன மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துதல், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையில் சிறந்து விளங்குதல் – உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம், சிறந்த நீர்வள ஆதாரத் திட்டமான சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு மேட்டூர் அணையின் வெள்ள உபரிநீரை நீரேற்று பாசனம் மூலம் திருப்புதல் உள்ளிட்ட பிரிவுகளில் தமிழ்நாடு நீர்வளத்துறைக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

# கடலோர மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்: ரஜினிகாந்த் அட்வைஸ் வீடியோ



சென்னை, மார்ச்.25

'நம்நாட்டின்நிம்மதியை கெடுக்க கடல் வழியாக பயங்கரவாதிகள் நாட்டுக்குள் புகுந்து கோர சம்பவங்கள்செய்வார்கள். எனவே, சந்தேகத்துக்குரிய நபர்கள் யாராவது நடமாடினால், அருகிலுள்ள போலீஸ் நிலையங்களில் புகார் தெரிவிக்க வேண்டும்' என்று, நடிகர் ரஜினிகாந்த் நேற்று திடீரென்று அட்வைஸ் வீடியோ வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: அனைவருக்கும் வணக்கம். நம் நாட்டின் பெயர், நிம்மதி, சந்தோஷம்.

அதை கெடுக்க பயங்கரவாதிகள் கடல் வழியாக நாட்டுக்குள் புகுந்து கோர சம்பவங்கள் செய்வார்கள். அதற்கு உதாரணம், மும்பையில் 26/11ல் நடந்த கோர சம்பவம். கிட்டத்தட்ட 175 பேரின் உயிரை வாங்கிடுச்சு. கடலோரம் வாழும் மக்கள் விழிப்புணர்வுடன் இருந்து, சந்தேகத்துக்குரிய நபர்கள் யாராவது நடமாடினால், அருகிலுள்ள போலீஸ் நிலையத்தில் புகார் தெரிவிக்க வேண்டும்.

இது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த 100 சிஐஎஸ்எப் வீரர்கள், கிட்டத்தட்ட 7 ஆயிரம் கிலோ மீட்டர் கடந்து, மேற்கு வங்கத்தில் இருந்து கன்னியாகுமரி வரை பேரணி செல்கின்றனர். அவர்கள் உங்களின் ஏரியாவுக்கு வரும்போது வரவேற்று, முடிந்தால் அவர்களுடன் சிறிது தூரம் சென்று வாருங்கள். நன்றி. வாழ்க தமிழ் மக்கள், வளர்க தமிழ்நாடு, ஜெய்ஹிந்த். இவ்வாறு ரஜினிகாந்த் கூறியுள்ளார். அவர் பேசும் வீடியோ இணையதளங்களில் வைரலாகி வருகிறது.

# 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி ஜாக்டோஜியோ போராட்டம்: தமிழகம் முழுவதும் நடந்தது




சென்னை, மார்ச்.25

10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டமைப்பானஜாக்டோஜியோ தொடர்ந்து போராடி வருகிறது. சமீபத்திலும் போராட்டம் நடந்தது. அந்த போராட்டத்தின் தொடர்ச்சியாக மறியல் போராட்டம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தனர்.

இதை தொடர்ந்து சென்னை தலைமை செயலகத்தில், கோரிக்கைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடந்தது. அதன் முடிவில் சட்டசபை கூட்டத்தொடரில் பட்ஜெட் அறிவிப்பில், கோரிக்கைகள் தொடர்பான அறிவிப்பு இடம்பெறும் என்ற நம்பிக்கையில் மறியல் போராட்டத்தை ரத்து செய்வதாக தெரிவித்தனர். இதையடுத்து கடந்த 14ம் தேதி அன்று தமிழக பட்ஜெட் வெளியானதை தொடர்ந்து, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலக கட்டிடத்தில் ஜாக்டோஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி, பட்ஜெட்டில் எதிர்பார்த்த அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றத்தை கொடுக்கிறது. எனவே கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஞாயிற்றுக்கிழமை (நேற்று) மாவட்ட தலைநகரங்களில் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும். அதன்பிறகும் அரசு மவுனம் காத்தால், வருகிற 30ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அடுத்தகட்ட போராட்டம் குறித்து கூடி முடிவு செய்யப்படும் என்பது போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டதாக ஜாக்டோஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் காந்திராஜ் தெரிவித்திருந்தார்.

இதன்படி ஜாக்டோ ஜியோ சார்பில், 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை சேப்பாக்கம் எழிலக வளாகத்தில் ஜாக்டோ ஜியோ அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். கோவையில் டாடாபாத் சிவானந்தா காலனியில் நடந்த உண்ணாவிரத போராட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர். இதேபோல திருநெல்வேலி, சேலம், திருச்சி, நாமக்கல், மதுரை, தஞ்சாவூர், ராமநாதபுரத்திலும் ஜாக்டோ ஜியோ அமைப்பை சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்றனர். அவர்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் நடத்தினர்.

# வரத்து அதிகரிப்பு எதிரொலி கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை கடும் சரிவு



சென்னை, மார்ச்.25

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பால் தொடர்ந்து காய்கறிகளின் விலை கடும் சரிவை சந்தித்து வருகிறது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் இருந்து தினசரி 650 வாகனங்களில் 7,000 டன் காய்கறிகள் வருவது வழக்கம். இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களாக தொடர்ந்து அனைத்து காய்கறிகளின் வரத்து அதிகரிப்பால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நேற்று 800 வாகனங்களில் இருந்து 9000 டன் காய்கறிகள் வந்து குவிந்தன.

இதனால் அனைத்து காய்கறிகளின் விலையும் கிடுகிடுவென சரிந்தது. ஒரு கிலோ வெங்காயம், உருளை கிழங்கு, நூக்கல், காலிபிளவர், சுரைக்காய், புடலங்காய், கத்தரிக்காய் ரூ.15க்கும், தக்காளி, சவ்சவ் ரூ.8க்கும் பீட்ரூட் ரூ.10க்கும், முள்ளங்கி ரூ.12க்கும், முட்டைக்கோஸ் ரூ.5க்கும் பாவைக்காய், அவரைக்காய், குடைமிளகாய், கொத்தவரங்காய் ரூ.20க்கும், வெள்ளரிக்காய், பச்சைமிளகாய், கோவைக்காய்ரூ.18க்கும், பீர்க்கங்காய், முருங்கைக்காய் ரூ.30க்கும், காராமணி ரூ.25க்கும் சேமகிழங்கு ரூ.40க்கும், இஞ்சி ரூ.40க்கும், பட்டாணி ரூ.50க்கும், பூண்டு ரூ.90க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து கோயம்பேடு காய்கறி மார்க்கெட் சிறு மொத்த வியாபாரிகளின் தலைவர் எஸ்.எஸ்.முத்துகுமார் கூறுகையில், ‘

‘ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் விளைச்சல் அதிகரிப்பால் காய்கறிகள் வரத்து அதிகரித்து அனைத்து காய்கறிகளின் விலையும் தொடர்ந்து சரிவு ஏற்பட்டு வருகிறது. குறைந்த விலையில் காய்கறிகள் விற்கப்படுவதால் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர். இந்த மாதம் முழுவதும் இந்நிலை நீடிக்கும். அடுத்த மாதம் வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்பதால் மீண்டும் அனைத்து காய்கறிகளின் விலையும் உயரும்'' என தெரிவித்தார்.

# அதிமுக முன்னாள் அமைச்சர் காமராஜின் அண்ணன் மகன் இளமுருகன் லஞ்ச வழக்கில் கைது

சென்னை, மார்ச்.25

அதிமுக முன்னாள் அமைச்சர் காமராஜின் அண்ணன் மகன் இளமுருகனை லஞ்ச வழக்கில் சிபிஐ கைது செய்துள்ளது. புதுச்சேரி பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் மற்றும் செயற்பொறியாளருக்கு ஒப்பந்தத்திற்கு சாதகமாக செயல்பட லஞ்சம் கொடுத்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். புதுச்சேரி தலைமை பொறியாளர் தீனதயாளன், செயற்பொறியாளர் சிதம்பரநாதன், பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர் இளமுருகன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். ரூ.7.44 கோடி மதிப்புள்ள சாலை ஒப்பந்தப் பணிக்கு சாதகமாக கையெழுத்திடுவதற்காக, ஒரு சதவீதம் லஞ்சம் என்ற அடிப்படையில் ஆறு லட்சம் கேட்டதாகவும், அதில் இரண்டு லட்சம் பணத்தை கொடுக்கும் பொழுது கையும் களவுமாக அதிகாரிகள் பிடிபட்டனர். அவர்கள் தொடர்பான இடங்களில் சோதனை நடத்தியதில் ரூ.73 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

# அண்ணாமலையார் கோயிலில் கூட்டம் அலைமோதல்: 3 மணிநேரம் காத்திருந்து தரிசனம்

திருவண்ணாமலை

திருவண்ணாமலை அண்ணாமலையார்கோயிலில் பக்தர்கள் வருகை அலைமோதியதால், சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்தனர். திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு பக்தர்களின்வருகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் சனி, ஞாயிறு விடுமுறையான நேற்றும், இன்றும் பக்தர்கள் வருகை அதிகரித்தது. இன்று அதிகாலை கோயில் நடை திறக்கும்போதே பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

அதிகாலை 5 மணி முதல் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். தரிசன வரிசை ராஜகோபுரத்தை கடந்து வெளி பிரகாரம் வரை நீண்டிருந்தது. காலை 10 மணிக்கு பிறகு பக்தர்களின் வருகை படிப்படியாக அதிகரித்தது. ஆந்திரா, தெலங்கானா மற்றும் கர்நாடக மாநில பக்தர்களின் வருகை அதிகரித்து காணப்பட்டது. அதனால், பொது தரிசன வரிசை மற்றும் ₹50 கட்டண தரிசன வரிசையில், சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக காத்திருந்து தரிசனம் செய்யும் நிலை ஏற்பட்டது.

## சென்னையில் கார்த்தி சிதம்பரம் ஆதரவாளர்களுடன் திடீர் கலந்துரையாடல்



சென்னை, மார்ச்.25

சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் சென்னை தி.நகரில் உள்ள தனியார் உணவு விடுதியில் மதிய உணவு அளித்து தனது ஆதரவாளர்களுடன் நேற்று கலந்துரையாடல் நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச்செயலாளர் அருள் பெத்தையா, முன்னாள் மாவட்ட பொருளாளர் தி.நகர் ஸ்ரீராம், ஓபிசி பிரிவின் மாநில துணைத்தலைவர் துறைமுகம் ஆர். ரவிராஜ் மற்றும் காங்கிரஸ் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து கார்த்தி சிதம்பரம் அளித்த பேட்டி:

சென்னையில் இருந்த கட்சி நண்பர்களை ஞாயிற்றுக்கிழமை மதிய உணவுக்காக அழைத்திருந்தேனே தவிர, இந்த சந்திப்பில் வேறெந்த காரணமும் இல்லை. வெறும் மக்கள் தொகையை மட்டும் அடிப்படையாக வைத்து பாராளுமன்ற சீட்டை நிர்ணயம் செய்தார்கள் என்றால் தென்னகம் பாதிக்கும். அதை முன்கூட்டியே அறிந்து மற்ற மாநிலங்களுடன் ஒருமித்த கருத்தை உருவாக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த முயற்சியை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ரசிகர்களை விஜய் சந்திக்காவிட்டால் தவெக சீமான் கட்சி போலாகும்: நடிகர் எஸ்.வி.சேகர் கருத்து: பாஜ மீதும் தாக்கு



கும்பகோணம், மார்ச்.25

பல்வேறு கோயில்களில் சுவாமி தரிசனம் செய்ய நடிகர் எஸ்.வி. சேகர் நேற்று கும்பகோணம் வந்தார். அப்போது ரயில் நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழகத்தில் வறுமை கோட்டிற்கு கீழே 10 லட்சம் பிராமணர்கள் உள்ளனர். அவர்கள் நலனுக்காக நல வாரியம் அமைக்க தமிழக முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

அவ்வாறு முதல்வர் நலிவடைந்த பிராமணர்களுக்காக நல வாரியம் அமைத்தால் நிச்சயம் அவர்களின் 5 லட்சம் வாக்குகள் திமுகவிற்கு கிடைக்க செய்வேன். பிராமணசமூகத்தை பாதுகாக்க போவதாக, இந்து மக்கள் கட்சி நிறுவனர் அர்ஜுன் சம்பத் கூறிவருகிறார். அவர், முதலில் அவரது சமூகத்தை பாதுகாக்கட்டும். அப்புறமாக பிராமணர் சமூகத்திற்கு வரட்டும். பிராமணர்கள் யாரும் அவரிடம் பாதுகாப்பு கேட்டு தஞ்சம் அடையவில்லை.

ஒரு நடிகர் ஹீரோவாக இருக்கும் போது ரசிகர்களால் கொண்டாடப்படுகிறார். அதே நடிகர் கட்சித் தலைவர் ஆகிறார் என்றால் ரசிகர்கள் அனைவரும் தொண்டராவார்களா என்பது கேள்விக்குறி. எனவே நடிகர் விஜய் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும். ரசிகர்களை சந்திக்க வேண்டும். இல்லையெனில் அவரது கட்சி சீமான் கட்சி போல் ஆகும். தமிழகத்தில் பாஜ பலூன் போல் உள்ளது. பலூன் போல் பெரிதாக இருந்தால் வலுவானது என அர்த்தம் இல்லை.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற தேர்தலில் திமுக மிக அதிக இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும். திமுக தலைமை கேட்டுக்கொண்டால் திமுகவிற்காக பிரசாரம் செய்வேன். ஆனால் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் இனி நான் சேரப்போவதில்லை. நாடாளுமன்ற மறு சீரமைப்பின் போது வட மாநிலங்களுக்கு எந்த விகிதாச்சார அடிப்படையில் தொகுதிகள் வழங்கப்படுகிறதோ, அதே விகிதாச்சாரப்படி தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கும் தொகுதிகள் கிடைக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்

## தமிழ்நாட்டில் வெப்ப நிலை அதிகரித்து வருவதால் மதிய வேளையில் நிறுத்தப்பட்ட வாகனங்களில் குழந்தைகளை விட்டு செல்ல கூடாது: பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.25

தமிழகத்தில் வெப்ப நிலை அதிகரித்து வருவதால் மதிய வேளையில் நிறுத்தப்பட்ட வாகனங்களில் குழந்தைகளை விட்டுச் செல்ல கூடாது என பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக பொது சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கை: தற்போது கோடைகாலம் துவங்கியுள்ளதால் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் வரும் நாட்களில் சராசரி வெப்ப நிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே பொது மக்கள் உயர் வெப்பநிலையிலிருந்து தங்களை பாதுகாப்பாக இருக்க வேண்டும். குறிப்பாக, சூடான வறட்சியான சிவந்த சருமம், உடல் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் இருப்பது, குமட்டல் மற்றும் வாந்தி, கடுமையான தலைவலி சோர்வு மற்றும் கால் பிடிப்பு, மூச்சுத்திணறல் நெஞ்சு படபடப்பு, தலை சுற்றல், மயக்கம், பதற்றம் உள்ளிட்டவை வெப்பம் சார்ந்த நோய்க்கான அறிகுறிகள். இந்த அறிகுறி இருந்தால் உடனடியாக 108 ஆம்புலன்சை அழைக்க வேண்டும்.

மேலும், பொதுமக்கள் போதுமான அளவு நீர் பருக வேண்டும். நேரிடை சூரிய ஒளியை தவிர்க்க வேண்டும். வெப்ப அலைகளில் இருந்து பாதுகாக்க குடைகள், தொப்பிகள் பயன்படுத்த வேண்டும். நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும். மதிய வேளையில் நிறுத்தப்பட்ட வாகனங்களில் குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை விட்டுச் செல்வதை தவிர்க்க வேண்டும். செயற்கை குளிர் பானங்கள், காபி, டீ, மது அருந்துவதை தவிர்க்க வேண்டும்.

நண்பகல் வேளைகளில் சமைப்பதை தவிர்க்க வேண்டும். வெயில் காலங்களில் காலணிகள் இல்லாமல் வெறும் காலில் நடப்பதை தவிர்க்க வேண்டும். அதிக புரதசத்து உணவு மற்றும் காலாவதியான உணவுகளை தவிர்க்க வேண்டும். கடுமையான வெப்பத்தால் பாதிக்கபட்ட ஒருவருக்கு குளிர்ந்த நிழல் உள்ள காற்றோட்டமான இடத்தில் படுக்க வைக்க வேண்டும். பாதிக்கப்பட்டவரின் உடைகளின் மேல் குளிர்ந்த நீரை ஊற்ற வேண்டும். குளிர்ந்த குடிநீரை பருக வழங்க வேண்டும், பாதிக்கப்பட்டவருக்கு ஐஸ்கட்டி ஒத்தடம் கொடுக்க வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.

## வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு திருச்சி கலால்துறை அதிகாரி மனைவிக்கு 4 ஆண்டு சிறை: லஞ்சம் மனிதனை குருடனாக்குகிறது என ஐகோர்ட் கிளை காட்டம்



மதுரை, மார்ச்.25

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கில் கலால் துறை முன்னாள் அதிகாரி, அவரது மனைவிக்கு தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டது. திருச்சியில் ஒன்றிய கலால் துறையில் சூப்பிரண்டாக இருந்து ஓய்வு பெற்றவர் கோவிந்தசாமி (66). இவர் 1.1.2002 முதல் 23.2.2012 வரை தூத்துக்குடியில் பணிபுரிந்தார். அப்போது வருமானத்துக்கு அதிகமாக ரூ.1 கோடியே 10 லட்சம் சொத்து குவித்ததாக கோவிந்தசாமி, அவரது மனைவி கீதா ஆகியோர் மீது சிபிஐ வழக்கு பதிவு செய்தது.

இந்த வழக்கை மதுரை சிபிஐ கோர்ட் விசாரித்து இருவரையும் விடுதலை செய்து 2018ல் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து சிபிஐ தரப்பில் ஐகோர்ட் மதுரை கிளையில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதி கே.கே.ராமகிருஷ்ணன், ''லஞ்சம் பெறுபவர்களின் குடும்பத்தினரும் லஞ்சத்தால் பாதிக்கப்படுவர். லஞ்சம் மனிதனை குருடனாக்குகிறது. அப்பாவி மக்களின் நியாயமான காரணத்தை நாசமாக்குகிறது.

இந்த வழக்கில் கணவன், மனைவி ஆகிய 2 பேர்மீதான குற்றச்சாட்டை சிபிஐ நிரூபித்து உள்ளது. எனவே இருவரையும் விடுதலை செய்து மதுரை சிபிஐ கோர்ட்டு பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. கோவிந்தசாமி, அவரது மனைவி கீதா ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனையும், முறையே ரூ.75 ஆயிரம், ரூ.25 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது. கோவிந்தசாமி கண் அறுவை சிகிச்சை மேற்கொள்ள பதிவு செய்துள்ளார். அவரை உடனிருந்து கவனிக்க கீதாவை தவிர வேறு யாரும் இல்லை. இதனால் இருவருக்கும் மதுரை சிறை கண்காணிப்பாளர் ஏப்ரல் 10ம் தேதி வரை பரோல் வழங்க வேண்டும். பரோல் முடிந்தவுடன் இருவரும் 10ம் தேதி மாலை சிறையில் சரண் அடைய வேண்டும்'' என உத்தரவிட்டார்.

## மே 5ல் வணிகர் சங்க மாநாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்மலா சீதாராமன் பங்கேற்பு: விக்கிரமராஜா தகவல்

நாமக்கல், மார்ச்.25

நாமக்கலில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் தலைவர் விக்கிரமராஜா நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: வரும் மே மாதம் 5ம் தேதி, மதுராந்தகத்தில் வணிகர் சங்க மாநில மாநாடு நடைபெறுகிறது. இதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மாநாட்டில் சாதாரண வணிகர்களை பாதுகாக்க சிறப்பு சட்டம் இயற்றவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

ஒன்றிய, மாநிலத்தில் ஆட்சி பொறுப்பில் இருப்பவர்கள் எங்களின் பிரச்னைகளை சரிசெய்யும் இடத்தில் இருக்கிறார்கள். இந்த மாநாட்டில் தமிழகம் முழுவதும் இருந்து சுமார் 5 லட்சம் வணிகர் சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கட்சி நிர்வாகியின் மனைவியை ஆபாசமாக திட்டிய பா.ஜ பிரமுகர் கைது



பழநி, மார்ச்.25

திண்டுக்கல் மாவட்டம், பழநி அருகே ஆண்டிபட்டி புதுமடை காலனியை சேர்ந்தவர் எல்லைத்துரை (45). பாஜவை சேர்ந்த இவர் நெசவு தொழில் செய்து வருகிறார். 2018ல் அறிவிக்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட உள்ளாட்சி தேர்தலில் பாஜ சார்பில் ஒன்றியக்குழு உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டவர். இவரை கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாக கூறி பாஜ திண்டுக்கல் மேற்கு மாவட்ட முன்னாள் தலைவர் கனகராஜ் நவம்பர் மாதம் கட்சியில் இருந்து நீக்கி அறிவிப்பு வெளியிட்டார்.

இதில் ஆத்திரமடைந்த எல்லைத்துரை தான் 2001 முதல் கட்சியில் இருப்பதாகவும், முன்னாள் பாஜ மாவட்ட தலைவர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தன்னை கட்சியில் இருந்து நீக்கியதாகவும் கூறி வாட்ஸ்அப், பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் பல்வேறு பதிவுகளை பதிந்து வந்தார். இந்நிலையில் எல்லைத்துரை சமூக வலைத்தளங்களில் கனகராஜ் தன்னை போனில் மிரட்டியதாக கூறி ஆடியோ ஒன்றை வெளியிட்டார். அந்த ஆடியோவில் எல்லைத்துரையின் மனைவி குறித்து ஆபாசமாக பேசுவது வெளிவந்தது. இதுகுறித்து எல்லைத்துரை தனது மனைவியுடன், பழநி தாலுகா போலீசில் கனகராஜ் மீது புகார் அளித்தார். தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திடமும் புகார் அளித்தார்.

இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு விளக்கம் கேட்டு மாவட்ட எஸ்பிக்கு மகளிர் ஆணையம் கடிதம் அனுப்பியது. இந்நிலையில், பாஜ முன்னாள் மாவட்ட தலைவர் கனகராஜ் பழநி தாலுகா போலீசாரால் நேற்று கைது செய்யப்பட்டார். கனகராஜ் மீது பெண்களை அசிங்கமாக பேசுதல், வார்த்தைகளால் மிரட்டுதல், பெண் வன்கொடுமை சட்டம் தொடர்பான 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சென்னையில் அதிகரிக்கும் வெப்பம் மாநகர பஸ்களில் மின்விசிறி பொருத்தும் பணி தீவிரம்



சென்னை, மார்ச்.25

சென்னையில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வாட்டி வதைத்து வரும் வெயிலால் மக்கள் பெரும் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக மோட்டார் வாகனங்களை ஓட்டுபவர்கள் வெப்பத்தின் தாக்கம் தாங்க முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் மாநகர பேருந்து ஓட்டுநர், நடத்துனர்களுக்கு ஓஆர்எஸ் கரைசல் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்ஜின் சூட்டோடு சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கமும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்பதால் ஓட்டுநர், நடத்துனர்களுக்கு அதிகளவில் தண்ணீர் தேவைப்படுகிறது.

காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதால் டிரைவர்கள் சோர்வடைகின்றனர். அடுத்த 2 மாதங்களுக்கு வெப்பநிலை அதிகமாக இருக்கும் என்பதால் மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் ஓட்டுநர்களுக்கு மின்விசிறி ஏற்பாடு செய்துள்ளனர். சென்னையில் ஓடக்கூடிய 3 ஆயிரம் பேருந்துகளில் 5 ஆயிரம் டிரைவர், கண்டக்டர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் வெப்பத்தால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக மின்விசிறி பொருத்தப்பட்டு வருகிறது.

ஓட்டுநர் இருக்கையின் மேல் பகுதியில் மின்விசிறி பொருத்துப்படுகிறது. இதுகுறித்து மாநகர் போக்குவரத்து கழகம் கூறியதாவது: சென்னை, மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், பணியாளர்களின் நலனை உறுதி செய்யும் வகையில், இந்த கோடை காலத்தில், ஓட்டுநர்களுக்கு அருகில் மின்விசிறி பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை மொத்தம் உள்ள 3,407 பேருந்துகளில் 1,994 பேருந்துகளில் மின்விசிறி பொருத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள பேருந்துகளில் மின்விசிறி பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

## போஸ்ட், ப்ரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.8 லட்சமாக உயர்த்த வேண்டும்: திமுக எம்பி வில்சன் வலியுறுத்தல்



சென்னை, மார்ச்.25

எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி வகுப்பைச் சார்ந்தவர்கள் போஸ்ட் மெட்ரிக், ப்ரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.8 லட்சமாக உயர்த்த வேண்டும் என்று திமுக எம்பி வில்சன் வலியுறுத்தியுள்ளார். திமுக எம்பி வில்சன் தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் கூறியிருப்பதாவது: எஸ்சி, எஸ்.டி மற்றும் ஓபிசி வகுப்பைச் சார்ந்தவர்கள், போஸ்ட் மெட்ரிக் மற்றும் ப்ரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பானது நெடுநாட்களாக ரூ.2.5 லட்சம் என்ற அளவிலேயே இருந்து வருகிறது.

இந்த இரண்டு லட்சம் என்கிற வருமான வரம்பானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுகர்வோர் விலைக் குறியீட்டுடன் இணைந்த திருத்தங்களை செய்யலாம் என்ற வீதிமுறையின் கீழ் 2010ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. அந்த வகையில் திருத்தமானது கடைசியாக கடந்த 2013ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், கல்விச் செலவுகள் மற்றும் பணவீக்கம் அதிகரித்த போதிலும், வருமான உச்சவரம்பு மற்றும் உதவித்தொகைகள் மாற்றம் காணாமல் உள்ளன.

மாறாக, இந்திய அரசாங்கமானது சமீபத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான வருமான வரம்பினை ரூ.8 லட்சமாக உயர்த்தியுள்ளது. இதேபோன்று எஸ்.சி., எஸ்.டி மாணவர்களுக்கான தேசிய வெளிநாட்டு கல்வி உதவித்தொகை மற்றும் உயர்தர கல்வித்திட்டம் போன்ற திட்டங்களுக்கான வரம்பு ரூ.8 லட்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், போஸ்ட் மெட்ரிக் மற்றும் ப்ரீமெட்ரிக் உதவித்தொகை திட்டங்களுக்கு இந்த வரம்பு உயர்த்தப்படவில்லை.

இதனால் பின்தங்கிய நிலையிலிருக்கும் ஏராளமான தகுதி படைத்த மாணவர்கள் இந்த உதவித்தொகையை பெறமுடியவில்லை. உயர்கல்வி குறித்த அகில இந்திய கணக்கெடுப்பின் அறிக்கையின்படி, எஸ்.சி மற்றும் எஸ்.டி மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதமானது, மற்றவர்களை விட மிகவும் பின்தங்கியுள்ளது.

இந்த இடைவெளியைக் குறைப்பதிலும், உயர்கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்வதிலும் நாம் தீவிரமாக இருக்கிறோம் என்றால், கல்வி உதவித்தொகைக்கான வருமான உச்சவரம்பு உயர்த்தப்பட வேண்டும். எனவே, போஸ்ட் – மெட்ரிக் மற்றும் ப்ரீ – மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பினை ரூ.2.5 லட்சத்தில் இருந்து ரூ.8 லட்சமாக உயர்த்த ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

## நிதி பகிர்வில் பாரபட்சம் ஒன்றிய நிதியமைச்சருடன் விவாதம் நடத்த தயார்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு சவால்



சென்னை, மார்ச்.25

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் கிழக்கு பகுதி திமுக சார்பில், அன்னம் தரும் அமுதக்கரங்கள் திட்டத்தின் கீழ், பொது மக்களுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி, பகுதி செயலாளர் எம்.டி.ஆர் நாகராஜ் ஏற்பாட்டில் அம்பத்தூரில் நடந்தது. இதில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று, பொது மக்களுக்கு உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல, அம்பத்தூர் மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அளித்த பேட்டி: மாநில அரசுகளுக்கு நிதி பகிர்வு செய்வதில் ஒன்றிய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது. பாஜ ஆளும் மாநிலங்களுக்கும், பாஜ ஆளாத மாநிலங்களுக்கும் பாரபட்சத்துடன் நிதி ஒதுக்குகிறது. தமிழ்நாட்டிற்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வந்தாலும் திரும்பத் திரும்ப ஒரே பொய்யை தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

அவரது பொய்களை நம்ப மக்கள் தயாராக இல்லை. இன்றைய கல்வி தான் நாளைய சமுதாயம் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட கல்விக்கு நிதி ஒதுக்காமல் இருப்பதும், மும்மொழி கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் நிதி ஒதுக்குவோம் என கூறுவதும் உண்மையில் நிதி அமைச்சருக்கு மனசாட்சி இருக்கிறதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

தமிழகத்தில் நடைபெறும் ஆட்சி மீது எந்த குறைகளையும் கூற முடியாததால், எதிர்க்கட்சிகள் ஆற்றாமையில் அவதூறு பரப்புகின்றனர். நிதி பகிர்வில் பாரபட்சம் குறித்து தமிழக நிதி அமைச்சர் தெளிவாக சட்டமன்றத்தில் பேசி உள்ளார். வேண்டுமென்றால் ஒன்றிய நிதி அமைச்சரை தமிழக நிதி அமைச்சருடன் வாதம் செய்ய சொல்லுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.


★ மாநில அரசுகளுக்கு நிதி பகிர்வு செய்வதில் ஒன்றியஅரசு மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

25.3.2025

# மாஜி எஸ்ஐ கொலை மேலும் ஒருவர் கைது





நெல்லை, மார்ச்.25

நெல்லையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற எஸ்ஐ ஜாகீர் உசேன்பிஜிலி (60), கடந்த 18ம்தேதி வெட்டிக் கொலைசெய்யப்பட்டார். இதில் தொடர்புடைய கார்த்திக், அக்பர்ஷா சரணடைந்தனர். முகமது தவுபிக்கை போலீசார் சுட்டுப் பிடித்தனர். கேரளாவில் பதுங்கியுள்ள நூருநிஷாவை தேடி வருகின்றனர். இந்நிலையில் முகம்மது தவுபிக்கின் உறவினரான 11ம் வகுப்பு மாணவனும் கைது செய்யப்பட்டுள்ளார். கொலையாளிகள் பயன்படுத்திய பைக் நூருநிஷாவின் மற்றொரு சகோதரர் பீர்முகமது(37) என்பவருக்கு சொந்தமானது என்பது தெரியவந்தது. இதை தொடர்ந்து நேற்று போலீசார் பீர்முகம்மதுவை கைது செய்தனர்.

# தமிழககேரள எல்லை சுங்கச்சாவடியில் ரூ.2 கோடி ஹவாலா பணம், சொகுசு கார் பறிமுதல்: 2 பேரிடம் தீவிர விசாரணை

கோவை, மார்ச்.25

கேரள தமிழ்நாடு எல்லை வாளையார் அருகே வாளையார் போலீசார் மற்றும் அமலாக்கப்பிரிவு போலீசார் ஒருங்கிணைந்து சுங்கச்சாவடி அருகில் வாகன சோதனையில் நேற்று அதிகாலையில் ஈடுபட்டனர். அப்போது கோவையில் இருந்து வாளையார் வழியாக பாலக்காடு நோக்கி வந்த சொகுசு காரை தடுத்து 2 பயணிகளிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து, அதிகாரிகள் விசாரணையில், முன்னுக்குப்பின் முரணாக இருவரும் பதிலளித்தனர்.

இதனால் சந்தேகமடைந்த போலீசார் காரை சோதனை நடத்தினர். அப்போது காரின் டிக்கி பகுதியில் புதிய 500 ரூபாய் நோட்டுகள் கத்தை கத்தையாக மொத்தம் 2 கோடி ரூபாய் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர். கடத்தலுக்காக பயன்படுத்திய காரையும் பறிமுதல் செய்தனர். ரூ.2 கோடி பணத்திற்குரிய ஆவணங்கள் எதுவும் இல்லை. இதுதொடர்பாக அதிகாரிகள் விசாரணை செய்ததில், அவர்கள் திருச்சூர் மாவட்டம் தொட்டிப்பாலை சேர்ந்த அர்ஜூண் (31), திருச்சூர் மாவட்டம் கொடகராவை அடுத்த பேராப்பிராவை சேர்ந்த பிரேஷீல் (39) என்றும் தெரியவந்தது.

சென்னையிலுள்ள கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தில் இருந்து கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் பெரும்பாவூரிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு பணம் கொண்டு செல்வதாக அவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து பணத்திற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு வாளையார் போலீசார் தெரிவித்தனர். மேலும் அர்ஜூன் ஒரு சிவில் வழக்கு சம்பந்தமுடையவர், பிரேஷீல் மீது வழக்குகள் ஒன்றுமில்லை என தெரிய வந்தது. தொடர்ந்து, இருவர் மீதும் வாளையார் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அண்ணாமலை பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் பத்திரிகையாளர்கள் மீது பாஜவினர் பயங்கர தாக்குதல்

திருச்சி, மார்ச்.25

திருச்சியில் அண்ணாமலை பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் பத்திரிகையாளர்கள் மீது பாஜகவினர் பயங்கரமாக தாக்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. திருச்சி, மன்னார்புரம் ரவுண்டானா அருகே நேற்று மாலை தமிழ்நாடு பாஜ சார்பில் ஒன்றிய அரசின் மும்மொழிக்கொள்கை விளக்கப்பொதுக் கூட்டம் நடந்தது. இதில் பாஜ மாநிலத் தலைவர் அண்ணாமலை, ஒன்றிய மாநில தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் எல். முருகன், முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மாநிலபொதுச்செயலாளர்கறுப்புமுருகானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொணடு பேசினர். பாஜ மாநில தலைவர் அண்ணாமலை பேச தொடங்கும் போது, கூட்டத்தில் இரு ந்த பாஜ கட்சியினர் இருக்கையில் இருந்து கலைந்து செல்ல தொடங்கினர். கூட்டம் தொடங்கும் போது, கட்சியினருக்கு போடப்பட்டிருந்த சேர்கள் காலியாக இருந்தது. மேலும், பாஜ தலைவர் அண்ணாமலை பேசும் போது கலைந்து சென்ற கூட்டத்தை தினகரன் புகைப்படக்காரர் சுந்தர் படம் பிடித்தார். இதை பார்த்தை பாஜ கட்சியினர், புகைப்படக்காரையும், முன்னணி தொலைக்காட்சி நிருபரையும் அடி த்து உடைத்தனர். மேலும் அவரது கேமராமிராவை பறித்து உடைத்தனர். இதில் காயமமைந்த 2 பேரும் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை க்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

# பிரசவ செலவுக்கு பணம் இல்லாததால் பெண் குழந்தையை விற்ற தாய்: கள்ளக்காதலன் கைது

ராஜபாளையம், மார்ச்.25

கோவை மாவட்டம் பொள்ளாச்சி டி.கோட்டம்பட்டி பகுதியை சேர்ந்தவர் தியாகராஜன். திருமணமானவர். இவருக்கு அதே பகுதியை சேர்ந்த 28 வயது பெண்ணுடன் கடந்த 2 ஆண்டுக்கு முன்பு பழக்கம் ஏற்பட்டது. இந்நிலையில், அந்தப் பெண் 5 மாத கர்ப்பமாக இருப்பது தெரிந்ததும் தியாகராஜன், கருவை கலைக்குமாறு கூறியதாக தெரிகிறது. அதற்கு அந்தப் பெண், 5 மாதமானதால், கருவை கலைக்க முடியாத சூழ்நிலை உள்ளது என டாக்டர் தெரிவித்ததாக கூறியுள்ளார்.

இதையடுத்துசில மாதங்களில் அந்தப் பெண் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் பிரசவத்திற்காக சேர்க்கப்பட்டார். கடந்த பிப்ரவரி மாதம் அவருக்கு பெண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் மருத்துவ சிகிச்சைக்கு பணம் தருவதாக கூறிய தியாகராஜன் தலைமறைவானார். இதனால், அதிர்ச்சியடைந்த அந்தப் பெண் அதே மருத்துவமனையில் அறிமுகமான ஒரு பெண்ணிடம் தனது சூழ்நிலையை கூறினார்.

குழந்தையை தன்னால் வளர்க்க முடியாது எனவும், தனக்கு வேறு ஒருவருடன் திருமணம் நடைபெற இருப்பதாகவும் கூறியுள்ளார். இதையடுத்து குழந்தையை, மதுக்கரையை சேர்ந்த ஒரு பெண்ணிடம் விற்று மருத்துவ செலவிற்கு பணம் செலுத்தியுள்ளார். குழந்தையை சட்டப்படி தத்து கொடுக்கவில்லை. மருத்துவமனையில் இருந்து ஊருக்கு சென்ற அந்தப் பெண் மற்றவர்களுடன் சகஜமாக பேசி வந்துள்ளார். ஆனால் குழந்தை பிறந்த விவகாரம் அரசல் புரசலாக தெரிந்துள்ளது.

இது தொடர்பாக தியாகராஜனின் மனைவியும், அந்த பெண்ணிடம் தகராறு செய்ததாக கூறப்படுகிறது. இதனால், மன வேதனை அடைந்த அந்த பெண், பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், புகார்அளித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து நேற்று முன்தினம் தியாகராஜனை கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும், பெற்ற குழந்தையை பணத்திற்காக விற்ற குற்றத்திற்காக அந்த பெண் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

# ஆசிரமத்திற்கு அதிகாரிகள் அதிரடியாக சீல் வைத்தனர் நள்ளிரவில் பூட்டை உடைத்து புகுந்த நித்யானந்தா சிஷ்யைகள்: சிவலிங்கத்தை கட்டிப்பிடித்து பூஜையால் பரபரப்பு





ராஜபாளையம், மார்ச்.25

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தை சேர்ந்தவர் டாக்டர் கணேசன். இவர் 18 வருடங்களுக்கு முன் நித்யானந்தாவின் தீவிர சிஷ்யராக இருந்து வந்தார். அப்போது தனக்கு சொந்தமான கோதை நாச்சியாபுரம் கிராமத்தில் உள்ள4ஏக்கர்நிலத்தையும், சேத்தூர் மலையடிவார பகுதியில் உள்ள சுமார் 37.75 ஏக்கர் நிலத்தையும் நித்யானந்தா தியான பீடத்திற்கு தானமாக வழங்கினார். இதன்பிறகு நித்யானந்தாவின் செயல்களால் அதிருப்தியடைந்த கணேசன், தியான பீடத்திற்கு தானமாக வழங்கிய 40 ஏக்கர் நிலத்தை மீட்டுத் தருமாறு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், நித்யானந்தாவின் ஆசிரமம் செயல்படக்கூடாது, சிஷ்யைகள் வெளியேற வேண்டும் என உத்தரவிட்டது. இதையடுத்து இரண்டு ஆசிரமங்களிலும் உள்ள நித்யானந்தாவின் சிஷ்யைகளை வெளியேற்ற தாசில்தார் ராமசுப்பிரமணியன் தலைமையில் காவல்துறையினர் கடந்த 19ம் தேதி ஆசிரமத்திற்கு சென்றனர். அப்போது, சிஷ்யைகள் ஆசிரமத்தை உள்புறமாக பூட்டிக் கொண்டு அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து 2 நாட்களுக்குள் இடத்தை காலி செய்ய வேண்டும் என கூறிவிட்டு அதிகாரிகள் புறப்பட்டு சென்றனர்.

அதிகாரிகள் அளித்த கெடு முடிந்ததையடுத்து நித்யானந்தா ஆசிரமத்திற்கு நேற்று முன்தினம் சென்றனர். அங்கிருந்த சிஷ்யைகளை வெளியேற அறிவுறுத்தினர். அவர்களும் சச்சரவு ஏதுமின்றி வெளியேறினர். இதையடுத்து அதிகாரிகள் ஆசிரமங்களை பூட்டி சீல் வைத்துவிட்டு சென்றனர். இந்நிலையில் நள்ளிரவு 12 மணியளவில் சேத்தூரில் அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் உள்ள ஆசிரமத்திற்கு வந்த சிஷ்யைகள், சீல் வைத்த பூட்டை உடைத்து உள்ளே சென்றனர்.

அங்கு இருட்டு அறைக்குள் அமர்ந்து சிவலிங்கத்தை கட்டிப்பிடித்தவாறு, 'தானமாக வழங்கியது எங்களது நிலம். அதனை வலுக்கட்டாயமாக அதிகாரிகள் பிடுங்கி வெளியேற்றுகின்றனர். பரமஹம்ச நித்யானந்தருக்கும் எங்களுக்கும் அநீதி நடந்துவிட்டது' என்று கூறி அழுது புலம்பிய படி பூஜை செய்யும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது. தகவல் அறிந்த சேத்தூர் போலீசார் நள்ளிரவில் உடனடியாக ஆசிரமத்திற்கு சென்றனர். அங்கு அத்துமீறி உள்ளே நுழைந்த சிஷ்யைகளை வெளியேற்றினர்.

# வீர தீர சூரன் 2 படத்தின் அடுத்த பாடல் அறிவிப்பு






தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விக்ரம் தனது 62வது படமான 'வீர தீர சூரன் 2' படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படத்தை சித்தா பட இயக்குனர் அருண்குமார் இயக்கியுள்ளார். எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியா ஷிபு தயாரித்துள்ள இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர்கதாபாத்திரத்தில்நடித்துள்ளார். ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படம் வருகிற 27ந் தேதி வெளியாக உள்ளது. சமீபத்தில் இப்படத்தின் இரண்டு பாடல்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றன.

அதனை தொடர்ந்து அடுத்த பாடல் குறித்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, நாளை 'அய்லா அலேலா' என்ற பாடலின் புரோமோ வெளியாக உள்ளது.

# "டெஸ்ட்" டிரெய்லர் ரிலீஸ் தேதி அறிவிப்பு




தமிழ் படம், விக்ரம் வேதா, இறுதி சுற்று, ஜகமே தந்திரம், மண்டேலா' உள்ளிட்ட படங்களை தயாரித்த சசிகாந்த் தற்போது இயக்குனராக அறிமுகமாகி உள்ளார். இந்த படத்தில் நயன்தாரா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு 'டெஸ்ட்' என்று பெயரிடப்பட்டுள்ளது. வொய் நாட் ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் மூலம் சசிகாந்த் இந்த படத்தை தயாரிக்கிறார். மாதவன், சித்தார்த், மீரா ஜாஸ்மின் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். டெஸ்ட் கிரிக்கெட்டை மையப்படுத்தி இப்படம் உருவாகி உள்ளது. இந்த படத்திற்கு இசையமைப்பாளர் சக்தி ஸ்ரீ கோபாலன் இசையமைக்கிறார். இப்படத்தில் சித்தார்த் கிரிக்கெட் வீரராகவும், மாதவன் பயிற்சியாளராகவும் நடித்து உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. சமீபத்தில் வெளியான் 'டெஸ்ட்' திரைப்படத்தின் டீசர் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்தத் திரைப்படம் வருகிற ஏப்ரல் 4ம் தேதி நேரடியாக நெட்பிளிக்ஸ் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகவுள்ளது. சமீபத்தில் மாதவன், சித்தார்த், நயன்தாரா ஆகியோரின் கதாபாத்திர அறிமுக வீடியோ வெளியாகி வைரலானது. இந்நிலையில் 'டெஸ்ட்' படத்தின் டிரெய்லர் வரும் 25ம் தேதி வெளியாக உள்ளதாக நெட்பிளிக்ஸ் அறிவித்துள்ளது.

# ஒருநாளைக்கு ரூ.25 ஆயிரம் செலவு செய்யும் நடிகை ரமோலா



கன்னட திரைஉலகில் பிரபல நடிகையாக இருந்து வருபவர் ரமோலா. இவர் சின்னத்திரையில் அறிமுகமாகி தற்போது திரைப்படங்களில் நடித்து வருகிறார். இவர் தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அவருடன் நடிகர் பவி பூவப்பா, நடிகை அம்ருதா உள்ளிட்ட சிலரும் பங்கேற்றனர். அவர்களிடம் நிகழ்ச்சி தொகுப்பாளர் உங்களது ஒருநாள் செலவுக்கு எவ்வளவு தேவைப்படும் என்று கேட்டார்.

அப்போது நடிகை ரமோலா ரூ.25 ஆயிரம் என்று கூறினார். இதைக்கேட்டு நிகழ்ச்சி தொகுப்பாளர் அதிர்ச்சி அடைந்தார். எனக்கு தனிப்பட்ட செலவுகள் அதிகம் உள்ளது. அவற்றுக்காக எனக்கு ஒருநாளைக்கு மட்டும் ரூ.25 ஆயிரம் தேவை என்றார் நடிகை ரமோலா. தற்போது இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது.

# 'சிக்கந்தர்' காஜல் அகர்வாலின் கதாபாத்திரம் இதுவா?

தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான ஏ.ஆர். முருகதாஸ் தீனா, ரமணா, ரஜினி, கத்தி, துப்பாக்கி என பல வெற்றி படங்களை இயக்கி ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். இவர் தற்போது பாலிவுட்டில் சல்மான்கானை வைத்து 'சிக்கந்தர்' படத்தை இயக்கி இருக்கிறார்.

ராஷ்மிகா மந்தனா கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தில் காஜல் அகர்வால், சுனில் ஷெட்டி மற்றும் சத்யராஜ் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

வருகிற 30ந் தேதி ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு உலக அளவில் 'சிக்கந்தர்' படம் வெளியாக உள்ளது. நேற்று இப்படத்தின் டிரெய்லர் வெளியானது. அதில் காஜல் அக்ர்வாலின் கதாபாத்திரம் காட்டப்பட்டிருந்தது. இதுமட்டுமில்லாமல், இப்படத்தின் 2வது பாடல் 'பம் பம் போலே' விலும் காஜல் இடம்பெற்றிருந்தார். இதன் மூலம் அவரது பாத்திரம் படத்தில் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# டி20 கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்த சன்ரைசர்ஸ் ஐதராபாத்



10 அணிகள் பங்கேற்றுள்ள 18வது ஐ.பி.எல். திருவிழா நேற்று கோலாகலமாக தொடங்கியது. இந்த தொடரில் ஐதராபாத்தில் இன்று நடைபெற்ற 2வது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது.

இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணி அதிரடியாக ஆடி ரன்கள் குவித்தது. சிக்சர் மழை பொழிந்த ஐதராபாத் 20 ஓவர்களில் 6 விக்கெட்டை மட்டும் இழந்து 286 ரன்கள் குவித்தது. ஐதராபாத் தரப்பில் இஷான் கிஷன் 106 ரன்களுடன் களத்தில் இருந்தார். இதையடுத்து 287 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் களம் கண்டது.

தொடக்கத்தில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய ராஜஸ்தான் இறுதி கட்டத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் 20 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 242 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 44 ரன் வித்தியாசத்தில் ஐதராபாத் அணி வெற்றி பெற்றது. ராஜஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக துருவ் ஜூரெல் 70 ரன்கள் எடுத்தார். ஐதராபாத் தரப்பில் சிமர்ஜித் சிங், ஹர்ஷல் படேல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இந்நிலையில், இந்த ஆட்டத்தில் ஐதராபாத் அணி உலக சாதனை ஒன்றை படைத்துள்ளது. அதாவது, உலக அளவில் டி20 கிரிக்கெட்டில் (சர்வதேசம் + உள்ளூர் + டி20 லீக்குகள்) ஒரு இன்னிங்சில் அதிக முறை 250 ரன்களுக்கு மேல் அடித்த ஒரே அணி என்ற சாதனையை ஐதராபாத் படைத்துள்ளது. ஐதராபாத் அணி ஒரு இன்னிங்சில் 4 முறை (287, 286, 277, 266) 250 ரன்களுக்கு மேல் அடித்துள்ளது. இந்தப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் இந்தியாவும், சர்ரே அணியும் (தலா 3 முறை) உள்ளன.

# மியாமி ஓபன் டென்னிஸ்; அடுத்த சுற்றுக்கு முன்னேறிய யூகி பாம்ப்ரி ஜோடி

மியாமி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் புளோரிடா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவின் (ரவுண்ட் ஆப் 32 சுற்றில்) இந்தியாவின் யூகி பாம்ப்ரிபோர்ச்சுக்கலின் நுனோ போர்ஜஸ் ஜோடி, ரோகன் போபண்ணாகுரோசியாவின் இவான் டோடிக் ஜோடியுடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய யூகி பாம்ப்ரி ஜோடி 64 , 36 , 107 என வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

# ஐ.பி.எல். வரலாற்றில் மோசமான சாதனை படைத்த ஜோப்ரா ஆர்ச்சர்

10 அணிகள் பங்கேற்றுள்ள 18வது ஐ.பி.எல். திருவிழா நேற்று கோலாகலமாக தொடங்கியது. இதில் கொல்கத்தாவில் நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா அணியை வீழ்த்தி பெங்களூரு அசத்தல் வெற்றியை பதிவு செய்தது. இந்நிலையில் இந்த தொடரில் இன்று 2 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

அதில் மாலை 3.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற ராஜஸ்தான் அணியின் கேப்டன் ரியான் பராக் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுயடுத்து ஐதராபாத் அணி முதலில் பேட்டிங் செய்தது .

ஐதராபாத்தின் தொடக்க வீரர்களாக டிராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் சர்மா களம் இறங்கினர். இதில் அபிஷேக் சர்மா 24 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து இஷான் கிஷன் களம் இறங்கினர். டிராவிஸ் ஹெட் இஷான் கிஷன் இணை அதிரடியாக ஆடியது. இந்த இணை ராஜஸ்தானின் பந்துவீச்சை அடித்து நொறுக்கியது. அதிரடியாக ஆடிய இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். இதில் டிராவிஸ் ஹெட் 67 ரன்னில் அவுட் ஆனார். அடுத்து வந்த நிதிஷ்குமார் ரெட்டி 30 ரன், ஹென்றிச் க்ளாசென் 34 ரன், அனிகெட் வர்மா 7 ரன் எடுத்து அவுட் ஆகினர். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய இஷான் கிஷன் சதம் அடித்து அசத்தினார்.

இறுதியில் ஐதரபாத் அணி 20 ஓவகளில் 6 விக்கெட்டை மட்டும் இழந்து 286 ரன்கள் குவித்தது. ஐதராபாத் தரப்பில் இஷான் கிஷன் 106 ரன்களுடன் களத்தில் இருந்தார். இதையடுத்து 287 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் ஆட உள்ளது.

இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் 4 ஓவர்களில் விக்கெட் எடுக்காமல் 76 ரன்கள் கொடுத்தார். இதன் மூலம் அவர் ஐ.பி.எல். வரலாற்றில் மோசமான சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது ஒரு ஐ.பி.எல். இன்னிங்சில் அதிக ரன்கள் விட்டுக்கொடுத்த வீரர் என்ற மோசமான சாதனையை ஜோப்ரா ஆர்ச்சர் படைத்துள்ளார். ஒரு ஐ.பி.எல். இன்னிங்சில் அதிக ரன்கள் விட்டுக்கொடுத்த வீரர்கள்:

ஜோப்ரா ஆர்ச்சர்: 40760 மொஹித் சர்மா: 40730 பாசில் தம்பி: 40700 யாஷ் தயால்: 40690

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.